Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.

SESSIONS CASE NO.89/2022

Deposition of PW8

| | | | |
|---|---|---|---|
| Name | : நவீன் | Village | : |
| Father's / Husband's Name | : ரவி | Calling | : |
| Age | : | Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 02nd day of December 2025.

(எதிரிகள் 1 முதல் 3 ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது நெ.35, டி.எச்.ரோடு புது சத்திரத்தில் குடியிருந்து வருகின்றேன். இவ்வழக்கு சம்வத்தில் இறந்துபோன அசோக்குமார் என்னுடைய அண்ணன். என்னுடைய அப்பா பெயர் ரவி. என்னுடைய அம்மா பெயர் தனபாக்கியம். எனக்கு கார்த்திக் என்ற இன்னொரு அண்ணன் உள்ளார். கடந்த 12.12.2020 அன்று வீட்டில் இரவு 8.30 மணிக்கு நான் எனது வீட்டில் அப்பா, அம்மா, அண்ணன்கள் அசோக், கார்த்திக் ஆகியோரோடு இருந்தேன். என்னுடைய அண்ணன் அசோக்குமாரின் நண்பர் சதீஸ் வந்து என்னுடைய அண்ணன் அசோக்குமாரை பேசுவதற்காக கூப்பிட்டார். என்னுடைய அண்ணன் அசோக்குமார் யாருடன் போனார். (அறிவார்ந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் யாருடன் போனார் என்னும் கேள்வி விடைபொதிவினா என்றும் அது ஒரு விடையை உள்அமைந்த வினா என்றும் ஆட்சேபித்தார். அவருடைய ஆட்சேபம் ஏற்றுகொள்ளபட முடியாதது என்று ஒதுக்கப்பட்டது). என்னுடைய அண்ணன் அசோக்குமார் சதீஸ்குமாருடன் போனார். அதன்பிறகு 9.30 மணிக்கு மதகன் மகன் அசோக்குமார் என்பவர் ஓடிவந்து அசோக்குமார் குத்துபட்டு ரத்ததோடு புதுசத்திரம் பஸ்ஸ்டாண்டு அருகே இருக்கின்றார் வாடா என்று என்னை அழைத்தார். அந்த சமயத்தில் என்னுடைய

வீட்டில் என்னுடைய அப்பா, அம்மா, பெரியண்ணன் ஆகியோர் இருந்தோம். என்னுடைய அப்பா பாத்ரூமுக்கு குளிக்க போயிருந்தார். அதன்பிறகு நான், எங்க அம்மா, எங்க அண்ணா கார்த்திக் பஸ் ஸ்டாண்டில் அடிபட்ட இடத்திற்கு சென்றோம். எங்க அண்ணன் மூச்சு பேச்சு இல்லாமல் கிடந்தான். அவரது இடதுபுற மார்புக்கு கீழே காயம் இருந்தது. அதன்பிறகு என்னுடைய அண்ணன் கார்த்திக் காரை எடுத்துட்டு வர சொல்லி திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் போய் சேர்த்தோம். டாக்டர் செக் செய்து பார்த்துவிட்டு இறந்துவிட்டார் என்று சொல்லிவிட்டார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்துக் கொண்டார்கள்.

<u>1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் முதல் விசாரணையில் "9.30 மணிக்கு மதகன் மகன் அசோக்குமார் என்பவர் ஓடிவந்து அசோக்குமார் குத்துபட்டு ரத்ததோடு புதுசத்திரம் பஸ்ஸ்டாண்டு அருகே இருக்கின்றார் வாடா என்று என்னை அழைத்தார்" என்று கூறியிருப்பதை போலிஸ் என்னை விசாரித்தபொழுது சொன்னேனா என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை சொல்லியிருக்கிறேன். இடது மார்புக்கு கீழே காயம் இருந்தது என்று போலிஸ் விசாரித்தபொழுது சொல்லியிருக்கிறேன். நான் 12 ஆம் வகுப்பு வரை படித்திருக்கின்றேன். போலிஸ் என்னைவிசாரித்தபொழுது அசோக்குமார் என்னுடைய தம்பி என்று சொல்லியிருக்கின்றேன் என்றால் அவ்வாறு சொல்லவில்லை அண்ணன் என்று சொல்லியிருக்கின்றேன். போலிசார் அசோக்குமார் என்னுடைய தம்பி என்று எழுதியிருந்தால் அது தவறு. போலிசார் என்னை ஆஸ்பிட்டலில் வைத்து விசாரித்தபொழுது 11, 11.30 மணியிருக்கும். போலிசார் என்னை விசாரித்தபொழுது இந்த சம்பவம் குறித்து எனக்கு என்னென்னவெல்லாம் தெரியுமோ அதை பற்றி எல்லாம் கூறினேன் என்றால் சரிதான். அரசு மருத்துவமனையில் டாக்டரிடம் சம்பவம் குறித்து நான் எந்த விவரமும் சொல்லவில்லை. போலிசார் என்னை விசாரித்தபொழுது என்னுடைய அப்பா, அம்மா எல்லோரும் என்னுடன் இருந்தார்கள். வீட்டில் இருந்து சம்பவ இடத்திற்கு எதில் வந்தீர்கள் என்றால் ஓடித்தான் வந்தோம். எங்களுடன் மதகன் மகன் அசோக்குமார் வந்தாரா இல்லை அப்படியே வீட்டிற்கு போய்விட்டாரா என்றால் எங்களுடன் வந்தார். அவரிடம் இந்த சம்பவம் பற்றி போலிசுக்கு தகவல் கொடுத்தீர்களா என்று கேட்டேனா என்றால் அவ்வாறு கேட்கவில்லை. நானாவது சம்பவ இடத்திலிருந்து போலிசுக்கு தகவல் கொடுத்தேனா என்றால் அவ்வாறு கொடுக்கவில்லை. நாங்கள் போகும்போது சம்பவ இடத்தில் ஒரு 20, 25 பேர்கள்

இருந்தார்களா என்றால் இது எனக்கு ஞாபகம் இல்லை. நாங்கள் அங்கே போனபிறகு என்னுடைய அண்ணனை தூக்கி முதலுதவி எதுவும் செய்தோமா என்றால் அவ்வாறு எதுவும் செய்யவில்லை. அங்கிருந்து 108 ஆம்புலன்சுக்கு போன் போட்டு சொன்னோமா என்றால் சொல்லவில்லை. என்னுடைய அண்ணன் காரை எடுத்துக்கொண்டு வந்துவிட்டான். அந்த கார் டவேரா கார் என்றால் சரிதான். நாங்கள் என்னுடைய அண்ணனை அந்த காரில் ஏற்றிச் செல்லும்பொழுது காரில் ரத்தம் சிந்தியது என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரிக்கும்பொழுது என்னுடைய அண்ணனை காரில் கொண்டுவந்ததாக தான் கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். என்னுடைய அண்ணன் எங்கள் கிராமத்தில் விஜய் ரசிகர் மன்ற தலைவர் என்றால் சரிதான். நான் என்னுடைய அண்ணன் என்று சொல்வது இறந்துபோன அசோக்குமார் என்றால் சரிதான். 1வது எதிரி ராஜா புதுசத்திரத்தில் அவரது வீட்டில் வைத்து அனுராகா என்னும் பெயரில் பாஸ்ட்புட் கடை வைத்து நடத்தி வந்தார் என்றால் சரிதான். என்னுடைய அண்ணன் அசோக்குமார் நடிகர் விஜயின் பிறந்தநாள் வந்தால் விமர்சையாக கொண்டாடுவார் என்றால் விமர்சையாக கொண்டாடமாட்டார். 15, 20 நோட்டுகள் பள்ளிக் குழந்தைகளுக்கு கொடுப்பார். என்னுடைய அண்ணன் நடிகர் விஜயின் பிறந்தநாளை விமர்சையாக கொண்டாடுவதற்கு கடைகடையாய் போய் வசூல் செய்வார் என்றாலும் அவ்வாறு 1வது எதிரியின் கடைக்கு போய் அவரிடம் பணம் கேட்டபொழுது அவர் மறுத்ததால் எல்லோரும் பணம் தரமாட்டார்கள் என்று காழ்புணர்ச்சியிலும் மற்றும் என்னுடைய அண்ணனுக்கும் மற்ற கட்சிகாரர்களுக்கும் ஏற்பட்ட பிரச்சனையில் அடிபட்டு இறந்தவரை, நான், என்னுடைய குடும்பத்தார்கள், மதகன் மகன் அசோக்குமார் மற்றும் ஜெகன் எல்லோரும் சேர்ந்து எதிரிகள் மீது இந்த பொய் வழக்கை ஜோடித்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**